## அறுவடையான பச்சைப் பயிரை உடனே விற்கலாம்

ஐக்கிய நாடுகள், பருப்பு வகைகளின் ஊட்டச்சத்து நன்மைகளை விழிப்புணர்வு ஏற்படுத்த 2016-ம் ஆண்டை □பருப்பு வகைகளின் சர்வதேச ஆண்டாக□ அறிவித்துள்ளது. வேளாண் அமைச்சகத்தின் படி, 2014-15-ம் ஆண்டில் பச்சைப் பயிறு 3.4 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 1.39 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் நுகர்வு தேவை 1.60 மில்லியன் டன்கள் இருந்ததால் பச்சைப் பயிறு 0.20 மில்லியன் டன்கள் இறக்குமதி செய்யப்பட்டது. மியான்மர், சீனா மற்றும் ஐக்கிய மாநிலங்கள் ஆகியவை அதிக அளவு பச்சைப் பயிறு இறக்குமதி செய்கிறது.

இந்தியாவில், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஒடிசா, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் உத்திரபிரதேசம் ஆகியவை பச்சைப் பயிறு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். புதிய பயிரின் வரத்து காரணமாக பச்சைப் பயிறு விலை குறைய வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழ்நாட்டில், பச்சைப் பயிறு 2.3 இலட்ச ஹெக்டரில் பயிரிடப்பட்டு 1.23 இலட்ச டன்கள் 2014-15 ஆம் ஆண்டில் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளில் நெல் தரிசாக, பருப்பு விளைவிக்கும் முறை பாரம்பரியமாகப் பின்பற்றி வருகின்றனர். நாகப்பட்டினம், திருவாரூர், திருவள்ளுர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை பச்சைப் பயிரை விளைவிக்கும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் எடிடீ 3 மற்றும் வம்பன் (ஜிஜி) 3 அதிகளவு பயிரிடப்படும் இரகங்களாகும்.

பச்சைப் பயிறு விற்பனையில் ஒரு சரியான முடிவை எடுத்து விவசாயிகளுக்கு உதவ, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் பின்புல அலுவலகம், விழுப்பும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 11 வருடங்களாக நிலவிய பச்சைப் பயிறு விலைகளை ஆய்வு செய்தது.

ஆய்வின் முடிவில், பச்சைப் பயிறு அறுவடையின் போது பண்ணை விலையாக கிலோவிற்கு ரூ.57 முதல் 60 வரை விலை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே

விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப் படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405.

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பயறுவகைத் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2450498